| UG–149 | BLT-12 |
|---|---|

# U.G. –B.A./B.Lit. DEGREE EXAMINATION – JUNE 2018.

First Year

தமிழ் கற்பித்தல்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு வரியில் விடை தருக.

1. தமிழைப் பரம் பொருளோடு ஒப்பிட்டவர் யார்?

2. சிந்தனையை வளர்ப்பதற்கு ஏற்ற கருவி எது?

3. மேற்பார்வைப் படிப்பிற்கு தலைமையேற்பவர் யார்?

4. உயிர்மெய்யெழுத்தினை ஒலிக்க எப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்?

5. கல்வியியல் தொழில் நுட்பத்தில் முதன்மையிடம் பெறுபவர் யார்?

6. நல்ல கையெழுத்து எதற்கு உவமையாகக் கூறப்படுகிறது?

7. சொல்முறைப் படிப்பினைக் கண்டறிந்தவர் யார்?

8. கலப்பு நடை என்றால் என்ன?

9. கண்ணன் பாட்டினை எழுதியவர் யார்?

10. தொடரிலக்கணம் எம்முறையில் கற்பிக்கப்படுகிறது?

11. கல்விக் குறிக்கோளின் வகை தொகை இயலை ஆராய்ந்தவர் யார்?

12. தஞ்சை நூல் நிலையத்தை எவ்வாறு அழைப்பர்?

13. நகைச் சுவையுடன் சிலேடை கலந்து பேசுபவர் யார்?

14. இயற்றமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?

15. செந்தமிழ் மாமுகில் எனப் பாராட்டப்பட்டவர் யார்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.

16. பின் ஒப்படைப்பு என்றால் என்ன?

17. பயிற்றல் என்றால் என்ன?

18. படித்தலின் இரு உட்கூறுகளை எழுதுக.

19. கட்டுரைப்பாடம் கற்பித்தலின் இருவகைகளைக் கூறுக.

20. படநாடாப் பேழையின் பயன்கள் யாவை?

21. மாணவனின் தேர்ச்சி எதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது?

22. மரபுசார் இலக்கணம் என்றால் என்ன?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தியில் விடையளி.

23. விளையாட்டு முறைக் கல்வியில் ஆசிரியரின் பங்கினை எழுதுக.

24. மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் பயன்களைக் கூறுக.

25. திருத்தமில்லாப் பேச்சின் இயல்புகளைப் பட்டியலிடுக.

26. தமிழ் உரைநடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

27. மதிப்பீடு, அளவீடுக்கிடையே உள்ள வேறுபாடுகளை ஆராய்க.

28. பள்ளி நூலகம் - குறிப்பு வரைக.

29. கற்றலில் காணலாகும் புதுமைப் போக்குகளை எடுத்தியம்புக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

30. பாடக் குறிப்பின் முக்கியத்துவத்தினை மு.கோவிந்தராஜ் வழி நின்று விளக்குக.

31. அகராதியை பயன்படுத்தும் வழிமுறைகளை விரிவாக எழுதுக.

32. இலக்கணம் கற்பிக்கும் இரு நிலைகளை வெளிப்படுத்துக.

33. புற வயப்பட்ட தேர்வின் நிறை, குறைகளை ஆராய்க.

34. மொழியாசிரியரின் கடமைகளைப் பட்டியலிடுக.

| UG–152 | BLT-11 |
|---|---|

# B.A./B.Lit. DEGREE EXAMINATION – JUNE, 2018

## First Year

## Tamil

### மொழியியல்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

1. கருத்துக்கும், சொல்லுக்கும் உள்ள தொடர்பினை ஆராய்ந்து வகைப்படுத்தியவர் யார்?

2. இந்திய ஐரோப்பிய மொழிகளை ஒப்பிட்டு அகராதியைத் தொகுத்து வெளியிட்டவர் யார்?

3. அமெரிக்காவில் இக்கால விளக்கமுறை மொழியியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?

4. பேச்சொலிகளை உயிர், மெய் என்று எதன் அடிப்படையில் பிரிக்கலாம்?

5. அடைப்பொலி உள்ள மொழி எது?

6. உதடுகள் விரிந்தோ அல்லது இயற்கையாகவோ இருக்க எழும் உயிர்கள் எவை?

7. மொழிப்பயிற்சிக்கு எந்தத்துறைகளில் பயிற்சி பெறலாம்?

8. மெச்சிகோவில் அசடக் மொழியில் ni என்பது எதனைக் குறிக்கிறது?

9. எண்ணுமுறைப் பெயர்கள் என்று கூறப்படுவன எவை?

10. ஆங்கிலத்தில் எத்தனை வகை சொற்கள் இருக்கின்றன?

11. diggles, diggs, uggles என்பன செயல்படு பொருளாக வரும்.

12. விருப்பேவலைக் காட்டும் உருபன் எது?

13. 'எழுதிவிடு' – இதில் 'விடு' என்பது ———— எனப்படும்.

14. சொற்களின் அமைப்பை விளக்குவது ————.

15. மாற்றிலக்கணக் கோட்பாட்டை உருவாக்கியவர் யார்?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. மொழியியல் துறைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

17. ஒலியுறுப்புகளில் ஐந்து உறுப்புகளை எழுதுக.

18. ஒலிப்பு முறையை வகைப்படுத்துக.

19. உயிரெழுத்துக்களின் உச்சரிப்பில் மூன்று தொழில்கள்.

20. மயங்கொலியன்களின் வகைகளை எழுதுக.

21. நிகழ்வெதிர் கால உருபு என்றால் என்ன?

22. நிலைபேறு விளக்குக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

23. ஜெர்மானிய ஒலி மாற்றக்கொள்கையை கூறுக.

24. ஒலியை ஆராயும் முறையை விளக்குக.

25. ஆடொலி பற்றி எழுதுக.

26. மூக்குயிர் குறித்து விளக்குக.

27. உருபன் பற்றி விளக்குக.

28. உருவிலா மாற்றுருபு பற்றி விளக்குக.

29. தொடரமைப்புக் குறித்து மு.வ. வழி விளக்குக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

30. மொழியின் வரலாறு குறித்துக் கட்டுரை வரைக.

31. ஒலியுறுப்புகளும் அவற்றின் தொழிலும் குறித்து விளக்குக.

32. ஒலியனைக் காண உதவும் கொள்கைகள் யாவை?

33. ‘சொல்லுணர்த்தும் பொருள் காலந்தோறும் மாற்றமடையும்’— என்ற கூற்றைச் சான்றுகளுடன் விளக்குக.

34. அண்மையுறுப்புகளை வகைப்படுத்திக் கட்டுரை வரைக.

———————

| | |
|---|---|
| **UG–161** | **BTM-11** |

B.A./B.Lit, DEGREE EXAMINATION – JUNE 2018.

First Year

Tamil

இக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.

1. பாரதியாரின் முப்பெருங்காவியங்கள் எவை?

2. இருண்ட வீடு - குறிப்புத் தருக.

3. கண்ணதாசன் ஆசிரியராக பணியாற்றிய இதழ்கள் எவை?

4. நீர் மாசுபடல் - விளக்கம் தருக.

5. “நல்வாழ்வு” - ஆசிரியர் யார்?

6. மு.வ.எழுதிய நூல்கள் இரண்டைக் கூறுக.

7. நோன்பிருக்கும் போது எவ்வுணர்வுகள் தோன்றக்கூடாது?

8. ‘கவிச்சக்கரவர்த்தி’ நாடகத்தில் இடம்பெறும் இரு பெண் பாத்திரங்களைக் குறிப்பிடுக.

9. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?

10. PLOT - பொருள் தருக.

11. குலசேகர பாண்டியன் யார்?

12. புதுமைப்பித்தனின் இயற்பெயர் என்ன?

13. நினைவுப் பாதை என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

14. தமிழில் புதினவகை எந்த ஆண்டு தோன்றியது?

15. பெண் புதினத்தின் கதைக்கரு என்ன?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு பத்தி அளவில் விடை தருக.

16. பாரதியாரின் கடையம் வாழ்க்கைக் குறித்து எழுதுக.

17. மரங்களை வெட்டுவதனால் ஏற்படும் பாதிப்புகள் யாவை?

18. “எளிமை ஓர் அறம்” - மு.வ. கூறுவன யாவை?

19. நாடக அமைப்பு எத்தனை வகைப்படும்?

20. பல்லவராயன் யார்? கூறுக.

21. புதுமைப்பித்தன் எழுதிய வரலாற்று நூல்கள் எவை?

22. பின்னோக்கு உத்தி என்றால் என்ன?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. குயில்பாட்டின் சிறப்புக் கூறுகளை விளக்குக.

24. ஆதிமந்தியின் பண்புகளைக் கூறுக.

25. மு.வ-வின் உரைநடை இயல்புகளைக் கூறுக.

26. அம்பிகாபதி — அமராவதி, காதலை விவரி.

27. புதுமைப்பித்தனின் "சாப விமோசனம்" உணர்த்தும் கருத்துக்களை விவரி.

28. சமூகப் புதினங்கள் - சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துமா? ஆராய்க.

29. அகிலனின் மொழிநடையை விளக்குக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. நிற்பதுவே ! நடப்பதுவே ! பறப்பதுவே ! கவிதை உணர்த்தும் சுற்றுச்சூழலை விளக்குக.

31. முருகன் அல்லது அழகு நூலில் கூறப்படும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

32. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் இடம்பெறும் தலைமை மாந்தர்கள், துணை மாந்தர்கள் யார்? விளக்குக.

33. புதுமைப்பித்தன் சிறுகதைகளில் காணப்படும் வாழ்வியல் கூறுகளை விளக்குக.

34. பெண் புதினத்தின், கதைப் பின்னல், வகைகள், மொழி நடை, உத்திகள் எவ்வாறு அமைந்துள்ளது விவாதி.

35. பாத்திரப்படைப்பின் கூறுகளை விளக்குக.

———————

| UG–162 | BTM–12 |
|---|---|

U.G. DEGREE EXAMINATION –
JUNE, 2018.

First Year

தமிழ் – இலக்கணம் – I
(நன்னூல், எழுத்து, சொல்)

Time : 3 hours　　　　Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு தொடரில் விடை தருக.

1. பொதுப்பாயிரம் என்றால் என்ன?

2. முதல் நூல் எனப்படுவது எது?

3. பகாப்பதம் – சிறு குறிப்பு வரைக.

4. வடசொல்லின் தமிழாக்க விதியைக் கூறுக.

5. புணர்ச்சியின் வகைகளைக் கூறுக.

6. ''கழற்குடத்தினை'' – யாருக்கு உவமையாகக் கூறுவர்?

7. சாரியை என்றால் என்ன?

8. உருபுப்புணர்ச்சி என்றால் என்ன?

9. சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

10. வேற்றுமை உருபுகள் யாவை?

11. தன்மைப் பெயர்களைக் குறிப்பிடுக.

12. தமிழ் + அமுது – எங்ஙனம் புணரும்.

13. பூ + தளிர் – புணரும் முறையைக் கூறுக.

14. ஓரெழுத்து ஒருமொழியாக வருவன எவை?

15. மகரக் குறுக்கம் என்றால் என்ன?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. விகாரத்தின் வகைகளைக் கூறுக.

17. வினா எழுத்துக்கள் எவை?

18. பாயிரத்தைக் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?

19. 'கிழக்கு + திசை' – எங்ஙனம் புணரும்?

20. சார்பெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

21. பெயர், விளியேற்கும்போது அடையும் மாற்றங்கள் யாவை?

22. உயிர்களை நன்னூலார் எங்ஙனம் பாகுபடுத்துகின்றார்?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

23. முக்காலமும் காட்டும் இடைநிலைகள் குறித்து எழுதுக.

24. உடம்படுமெய் என்றால் என்ன?

25. சாரியைகள் எவை?

26. நான்காம் வேற்றுமை எவ்வெப் பொருளில் வரும் சான்று தருக.

27. பெயரெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

28. எண் வகை விடைகள் யாவை?

29. உயர்திணைப் பெயர்கள் பற்றி தொல்காப்பியர் கூறும் கருத்துக்களை எழுதுக.

பகுதி ஈ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. ஆசிரியர் வரலாறு, ஆசிரியரல்லாதார் இலக்கணம் குறித்து நன்னூல் வழி நீவிர் அறிவன யாவை? விளக்குக.

31. ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்களின் புணர்ச்சி முறையினைப் புலப்படுத்துக.

32. ழகர ஈற்றுச் சொற்கள் புணரும் பாங்கைச் சான்று தந்து விளக்குக.

33. ஆகுபெயர் என்றால் என்ன? வகைகளைச் சான்றுகளுடன் தருக.

34. பொருள்கோள்களின் வகைகளைக் கூறி சான்றுகள் தருக.

———————

| UG–163 | BTMAL–11 |
| --- | --- |

# B.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

First Year

Tamil

தமிழக வரலாறும் பண்பாடும்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஒரு தொடரில் விடை தருக.

1. எட்டுத்தொகை நூல்கள் யாவை?

2. தமிழகத்தின் எல்லைகளைப் பற்றிக் கூறும் இலக்கண நூல் எது?

3. சங்ககாலத்தில் பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னர் யார்?

4. திருமந்திரத்தை இயற்றியவர் யார்?

5. காஞ்சிக்கு வருகை தந்த சீனப் பயணி யார்?

6. பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் யாவை?

7. பன்னிரு திருமுறைகள் யாருடைய ஆட்சிக் காலத்தில் தொகுக்கப்பட்டன?

8. பாண்டிய நாட்டு மக்களைப் பற்றி குறிப்புக்களை எழுதிய வெளிநாட்டு அறிஞர் யார்?

9. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய மன்னர் பெயர் என்ன?

10. நாயக்கர் காலத்தில் இயற்றப்பட்ட இலக்கியங்கள் யாவை?

11. நாயக்கர் மகால் எங்கு உள்ளது?

12. வேலூர்க்கலகம் எப்பொழுது நடைபெற்றது?

13. தமிழில் தோன்றிய முதல் புதினம் எது? அதன் ஆசிரியர் பெயர் என்ன?

14. எழுத்துச் சீர்த்திருத்தத்தைக் கொண்டுவந்த வெளிநாட்டு தமிழ் அறிஞர் யார்?

15. திராவிடர் கழகத்தை ஆரம்பித்தவர் பெயர் என்ன?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. ஐம்பெருங்குழுவில் இடம் பெற்றிருந்தோர் யாவர்?

17. ஐந்திணைகள் யாவை?

18. களப்பிரர்கள் யார்?

19. குடவோலை முறை என்றால் என்ன?

20. நாயக்கர் காலத்தில் கல்வி கற்க பயிற்று மொழி எது?

21. தமிழில் அச்சுக்கலையை உருவாக்கியவர்கள் யார்?

22. நீதிக்கட்சி – குறிப்பு வரைக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. செப்பேடுகள் எங்குக் கிடைத்துள்ளன? அவற்றின் சிறப்புக்கள் யாவை?

24. பண்டைய தமிழகத்திற்கும் சிந்துவெளி நாகரித்திற்கும் இருந்த தொடர்பினை எழுதுக.

25. களப்பிரர் காலத்தில் இருந்த சமயநிலை குறித்து எழுதுக.

26. முதலாம் மகேந்திரவர்மனின் தனிச் சிறப்புகள் யாவை?

27. சோழர் காலத்தில் உருவான இலக்கியங்கள் பற்றிய செய்திகளை எழுதுக.

28. முஸ்லீம் படையெடுப்பினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

29. வேலூர்க் கலகம் – குறிப்பு வரைக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. சங்ககாலம் பொற்காலம் – ஆய்க.

31. பல்லவர்காலக் கலைகள் பற்றிய செய்திகளைத் தொகுத்தெழுதுக.

32. சோழர்களின் ஆட்சி நிர்வாகம் குறித்து விளக்குக.

33. நாயக்கர் காலத்தில் ஏற்பட்ட சமூகப் பொருளாதார நிலை பற்றிய கருத்துக்களை எழுதுக.

34. விடுதலைக்குப்பின் தமிழகத்தில் நிகழ்ந்த மாற்றங்கள் குறித்து விளக்குக.